








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 23.11.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- பொருளாதார நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்











## தமிழக நிகழ்வுகள்

- **சூறாவளிப் புயல் - கஜா**
    - 2018 ஆம் ஆண்டு **நவம்பர் 16ம் தேதியன்று 'கஜா'** என்ற சூறாவளிப் புயலானது தமிழக கடற்கரையை கடந்தது. இந்தப் புயலானது சென்னையிலிருந்து 300 கி.மீட்டருக்கு அப்பால் நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் ஆகியவற்றிற்கு இடையே **180 கி.மீ.** வேகத்துடன் கரையைக் கடந்தது.
    - தென்கிழக்கு ஆசியாவில் புயல்கள் வெவ்வேறு நாடுகளில் பெயரிடப்படுகின்றன. ஆந்திரா மற்றும் ஒடிஷா ஆகிய மாநிலங்களை தாக்கிய **"டிட்லி"** புயலானது பாகிஸ்தானில் பெயரிடப்பட்டது.
    - "கஜா" புயலானது **இலங்கையில்** பெயரிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய நிகழ்வுகள்

- **வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைவு** குறித்த 2 நாள் நடைபெறும் இந்திய – கிர்கிஸ்தான் அரசுகளுக்கிடையேயான ஆணையத்தின் **9வது அமர்வு புதுடெல்லியில்** நடைபெற்றது.
    - இம்மாநாட்டின் **10வது** அமர்வானது கிர்கிஸ்தான் குடியரசின் **பிஷ்கெக்** நகரில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது.

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் திறன் மேம்பாட்டு திட்ட அலுவலகம் சார்பில், **பெங்களூரில் உள்ள இஸ்ரோ தலைமையகத்தில்**, விண்வெளி ஆராய்ச்சி நடவடிக்கையில் இஸ்ரோவுடன் கைகோர்த்துச் செயல்படுவதற்கு உற்பத்தி முகமைகளை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு, **விண்வெளி உற்பத்திப் பொருள் உச்சி மாநாடு நவம்பர் 28ம் தேதி** அன்று நடைபெற உள்ளது.

- **இந்தியா – ஆஸ்திரேலியா** நாடுகளுக்கிடையே முதலீடுகளை அதிகரித்தல், **விவசாய ஆராய்ச்சி, கல்வி** ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட **5 ஒப்பந்தங்கள்** கையெழுத்தாகி உள்ளது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய சேவைகளை வழங்க இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

- குறிப்பு:
  - குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியக் குடியரசுத் தலைவர் ஒருவர், ஆஸ்திரேலியா செல்வது இதுவே முதல் முறையாகும்.

## உலக நிகழ்வுகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான வார்த்தையாக **'Toxic'** எனும் **அடைமொழிச் சொல்லை ஆக்ஸ்போர்டு அகராதி** அறிவித்துள்ளது. இந்த அடைமொழிச் சொல்லானது "**நச்சுத்தன்மை**" என்ற பொருளில் வரையறை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த சொல்லின் அதிகபட்ச பயன்பாடானது அதன் தேர்ந்தெடுப்பிற்கு வழி வகுத்துள்ளது.
  - 2017-ல் **'Youthquake'** என்ற சொல்லும் 2016ல் **'Post truth'** என்ற சொல்லும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

- **சீன நாடானது**, விண்வெளி சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கான **ஷியான் - 6** என்னும் செயற்கைகோள் மற்றும் 4 சிறியவகை செயற்கைக் கோள்களை **"லாங் மார்ச் - 2டி"** என்ற ஒரே ராக்கெட் மூலம் வெற்றிகரமாக, விண்ணில் செலுத்தியது.
  - **மார்ச் - 2டி** ராக்கெட் மூலம் அந்தச் செயற்கைக்கோள் கான்ஸீ மாகாணத்திலுள்ள ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

## பொருளாதார நிகழ்வுகள்

- மிகப்பெரிய அளவில் உள்ள வாராக் கடன்களை சரி செய்வதற்காக ஒரு சொத்து மேலாண்மை நிறுவனத்தை **(AMC – Asset Management Company)** உருவாக்குவதாக சுனில் மேத்தா குழு அறிவித்துள்ளது. இந்த AMC-ன் பெயர் இந்திய சஷாகட் சொத்து மேலாண்மை நிறுவனமாகும்.
  - வங்கியல் துறையில் உள்ள பாதிப்பை சமாளிக்க இந்த சஷாக்ட் திட்டம் (**Project Sashakt**) தொடங்கப்பட்டுள்ளது.

## விருதுகள்



We Shine Academy™

- **இந்தியா டுடே ஊடகம் சார்பில் விருதுகள் வழங்கும் விழா புதுடெல்லியில்** குடியரசுத் துணைத் தலைவர் **வெங்கையா நாயுடு** தலைமையில் நடைபெற்றது.
    - இவ்விழாவில், தமிழக அரசுக்கு, சிறந்த சட்டம் ஒழுங்கு, சிறந்த சுற்றுலா தளம் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச ஆண்கள் தினம் - நவம்பர் 19**
    - நேர்மறையான முன்மாதிரிகளை அடையாளங் காட்டவும் ஆண்களின் நலன் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 19ம் தேதியன்று சர்வதேச ஆண்கள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
    - 2018ம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு **"நேர்மறையான ஆண் முன் மாதிரிகள்"** என்பதாகும்.

We Shine Academy ™